# 3

# பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

அரசாங்கம் தொடர்ந்தும் பொருளாதாரம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் விதத்தில் 2016ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் முதலீடுகளை மேற்கொண்டது. வலு, போக்குவரத்து, வீதிகள் மற்றும் துறைமுகங்கள் போன்ற நாட்டின் பெரும்பாலான பொருளாதார உட்கட்டமைப்புக்களும் கல்வி, நலம் போன்ற சமூக உட்கட்டமைப்புக்களும் இக்காலப்பகுதியில் சாதகமான வளர்ச்சி செயலாற்றத்தினைக் காட்டின. குறைந்த பன்னாட்டு எண்ணெய் விலைகளின் முக்கிய காரணமாக வலுத் துறை சிறந்த முறையில் செயலாற்றியது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தூண்டுவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டிருக்கிறது. பிராந்திய கப்பல் நிறுவனங்களுக்கு கூடியளவு பணிகளை வழங்குகின்ற உலக தரம் வாய்ந்த முனைக்கோடி வசதிகளுடன் தென்னாசியாவில் முன்னணி மாற்றிக் கப்பலேற்றல் மையமாக கொழும்புத் துறைமுகத்தினை அபிவிருத்திச் செய்வதன் மூலம் கப்பல் போக்குவரத்து பொருளாதாரத்திற்கு இலங்கையை மாற்றியமைப்பதற்கான சாத்தியமான வளத்தினை பயன்படுத்திக் கொள்வதற்கு முன்முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முன்மொழியப்பட்டுள்ள கொழும்பு புறநகர் புகைவண்டிச் செயற்றிட்டம் கொழும்பிலும் புறநகர்ப்பகுதியிலும் ஊர்திகளின் போக்குவரத்தினைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பெருநகர்ச் செயற்றிட்டம் பொருளாதாரத்தின் மிக அவசிமான அமைப்பியல் நிலை மாற்றங்களுடன் சேர்ந்து மேற்குப் பிராந்தியத்தின் பிரதேசம் சார்ந்த பண்புகளை மாற்றிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது நாட்டின் முக்கிய வர்த்தக நகரமானது பிராந்திய வான் போக்குவரத்து, துறைமுகம் மற்றும் நிதியியல் மையமாகத் தோற்றம் பெறுவதற்கும் வசதியளிக்கும். அரசாங்கம் கல்வி மற்றும் நலம் போன்ற சமூக உட்கட்டமைப்பின் முன்னேற்றங்களுக்கும் தொடர்ந்தும் ஆதரவளிக்கின்றது. எனினும், சமூக உட்கட்டமைப்பையோ அல்லது பொருளாதார உட்கட்டமைப்பையோ வழங்குவது தொடர்பான நீடித்துநிலைத்திருக்கும் தன்மையானது மட்டுப்படுத்தப்பட்ட இறை வசதிகளின் கிடைப்பனவின் காரணமாக பாதிக்கப்படக்கூடும். ஆகவே, தனியார் துறை முதலீடுகளைத் தூண்டத்தக்க சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் தனியார் துறை ஈடுபடுவதனை ஊக்குவிப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும். சமூக உட்கட்டமைப்பு வசதிப்படுத்தல்கள் எப்பொழுதும் நாட்டில் பாதிக்கப்படக்கூடிய குழுவினரின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்திலேயே வடிவமைக்கப்பட்டிருக்கும். எனினும், நாடு மேல் நடுத்தர வருமான அந்தஸ்தினை நோக்கி முன்னேறி வருவதனால் குறிப்பாக பொருளாதாரத்தின் தோற்றம் பெற்றுவரும் நடுத்தர வகுப்புப் பிரிவின் தேவைகளுடனும் கேள்விகளுடனும் பொருந்தக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கக்கூடிய புதிய கோணத்திலான கொள்கைகளை அரசாங்கம் வடிவமைக்க வேண்டியது அவசியமானதாகவுள்ள வேளையில், நாட்டிலுள்ள தேவையான மக்களுக்கு சமூக உட்கட்டமைப்புக்கள் வழங்கப்படுவதனையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. மேலும், நாட்டில் உயர்ந்த பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார நியமங்களை அடையும் பொருட்டு பௌதீக அல்லது வன் உட்கட்டமைப்பின் முறையான தொழிற்பாடு மற்றும் பயன்பாட்டை நிருவகிக்கின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை உள்ளடக்கிய ஏற்கனவே இருக்கும் மென் உட்கட்டமைப்பின் வினைத்திறனை மேம்படுத்துவது இன்றியமையாததாகும்.

## பொருளாதார உட்கட்டமைப்பின் அபிவிருத்திகள்

### தொடர்பூட்டல் பணிகள்

- **2016இன் முதலரைப் பகுதியில் தொடர்பூட்டல் துறை மிதமான வளர்ச்சியைக் காட்டியது.** செல்லிடத் தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 2015 யூன் இறுதியிலிருந்து 2016 யூன் வரையான காலப்பகுதியில் 5.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பிவழி தொலைபேசி இணைப்புக்கள் 2.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன. செல்லிடத் தொலைபேசி இணைப்புக்களுக்கு மக்கள் மாறுகின்ற தன்மையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நிலையான கம்பி இணைப்பற்ற இணைப்புக்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக்காட்டி 2016இன் முதலரைப் பகுதியின் இறுதியில் 6.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இதன் காரணமாக 2015 யூன் இறுதியிலிருந்து 2016 யூன் இறுதி வரையான காலப்பகுதியில் மொத்த நிலையாகப் பொருத்தப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஆய்விற்குரிய காலப்பகுதியின் இறுதியில் நிலையாகப் பொருத்தப்பட்ட தொலைபேசிகளின் நுழைவு (ஒவ்வொரு 100 ஆட்களுக்குமான இணைப்புக்கள்) மற்றும் செல்லிடத் தொலைபேசி நுழைவுகள் முறையே 12.3 சதவீதமாகவும் 116.6 சதவீதமாகவும் காணப்பட்டன. இணையத்தளப் பணிகளைப் பொறுத்தவரை, 2015 யூன் இறுதியிலிருந்து 2016 யூன் இறுதி வரையான காலப்பகுதியில் மொத்த இணையத்தள இணைப்புக்கள் 11.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, 2014/15இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 36.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இணையத்தள நுழைவு (ஒவ்வொரு 100 ஆட்களுக்குமான இணைப்புக்கள்) 20.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. இணையத்தள இணைப்புக்களின் வளர்ச்சிக்கு நிலையான இணையத்தள இணைப்புக்களில் ஏற்பட்ட 26.5 சதவீதம் கொண்ட விரைந்த வளர்ச்சி உதவிபுரிந்த வேளையில், செல்லிடத் தொலைபேசிகளின் இணையத்தள இணைப்புக்கள் 2014/15இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 42.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.5 சதவீதத்தினால் மாத்திரம் வளர்ச்சியடைந்திருந்தது.

**வரைபடம் 3.1 புதிய தொலைபேசி இணைப்புக்கள் (பொருத்தப்பட்ட மற்றும் கையடக்க தொலைபேசி) மற்றும் வழங்கப்பட்ட புதிய இணைய இணைப்புக்கள்**




**அட்டவணை 3.1 தொலைத்தொடர்பூட்டல் பணிகள்**

| வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | 2015 யூன் முடிவில் | 2016 யூன் முடிவில் (அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| பொருத்தப்பட்ட தொலைபேசிகள் ('000) | 2,677 | 2,597 | -3.0 |
| கையடக்கத் தொலைபேசிகள் ('000) | 23,381 | 24,696 | 5.6 |
| இணைய இணைப்புகள் ('000) (ஆ) | 3,799 | 4,232 | 11.4 |
| மொத்த தொலைபேசி அடர்த்தி | 124.28 | 128.89 | 3.7 |
| கையடக்கத் தொலைபேசி அடர்த்தி | 111.52 | 116.62 | 4.6 |

மூலம்: இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது
(ஆ) கையடக்கத் தொலைபேசி இணையத்தளத் தொடர்புகள் உள்ளடங்கலாக

- **தொடர்பூட்டல் தொழில்துறை உலகளாவிய இணைப்புக்களை மேம்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளையும் எடுத்திருக்கிறது.** சிறிலங்கா ரெலிகொம் பப்ளிக் லிமிடெட் கம்பனி, வினாடிக்கு 100 ஜிகாபிட்ஸ் வரை தரமுயர்த்தக்கூடிய தொழில்நுட்பத்துடனும் அதேவேளை வினாடியொன்றிற்கு 24 ரெறாபிட்ஸ் அகலப்பட்டை இயலளவையும் கொண்ட விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழையிலான கடல் கீழ் கம்பி வடம் எஸ்ஈஏ-எம்ஈ-டபிள்யூஈ 5 (எஸ்எம்டபிள்யு 5) இன் முழுமையான நன்மைகளைப் பெற்றுக் கொண்டது. எஸ்எம்டபிள்யு5 தெற்கு மற்றும் கிழக்காசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பா என்பனவற்றை இணைக்கும். மேலும், மாத்தறையில் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் முழுமையான தரைவழி நிலையம் இலங்கையில் உலகளாவிய பிரசன்ன மையமொன்றினை நிறுவுவதனை இயலச்செய்யும். இது, எஸ்எம்டபிள்யு5 பல உலகளாவிய பிரசன்ன மையங்களுடன் இணைக்கப்படுவதனால் பல பிராந்திய உயர்வேக நம்பகத் தரவு இணைப்புக்களுக்கு வசதியளிக்கின்ற வேளையில் மற்றைய கடலின் கீழான

கம்பி வடங்களுடன் குறுக்கு இணைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்களையும் உறுதிப்படுத்துகின்றது. டயலொக் ஆக்ஸிஆட்டா பிஎல்சி 2016 மேயில் பே ஒவ் பெங்கோல் கேட்வே கடலின் கீழான கம்பிவடம் பதிக்கின்ற வேலைகளைத் தொடங்கியுள்ளது. பே ஒவ் பெங்கோல் கேட்வே இந்தியா, மலேசியா, ஐக்கிய எமிரேட்ஸ் மற்றும் ஓமான் என்பனவற்றை இணைப்பதுடன் 100 ஜிகாபிட்ஸ் தொழில்நுட்பம் மற்றும் 6.4 ரெறாபிட்ஸ் அகலப்பட்டை கொண்ட ஆரம்ப முறைமை இயலளவு என்பனவற்றுடன் இணைந்து உயர்வேக தரவு பரிமாணங்களுக்கு வசதியளிக்கின்றது. அதேவேளை, 4ஜி இணையத்துடன் முழுத்தீவையும் உள்ளடக்கக்கூடிய “கூகிள் லூன் செயற்றிட்டம்” இன் ஆரம்பப் பரீட்சிப்புக்கள் 2016இன் முதற்காலாண்டில் நிறைவடைந்துள்ளன.

## பெற்றோலியம்

- **2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெய் விலைகள் அதிகரித்துச் செல்லும் போக்கொன்றினைப் பதிவு செய்தன.** ஆய்விற்குரிய காலப்பகுதியில் சராசரி பன்னாட்டு மசகெண்ணெய் விலைகள் (பிறெண்ட்) 2015இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 56.62 உடன் ஒப்பிடுகையில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 43.08 ஆகக் காணப்பட்டன. பிறெண்ட் மசகெண்ணெய் விலைகள் 2016 சனவரி 21இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 28.09 இற்கு வீழ்ச்சியடைந்து 2003 செத்தெம்பருக்குப் பின்னரான மிகக் குறைந்த மட்டத்தினைப் பதிவுசெய்தமைக்கு, ஈரான் மீதான எண்ணெய் ஏற்றுமதித் தடைகள் நீக்கப்பட்டதன் பின்னர் அதன் எண்ணெய் ஏற்றுமதிகள் அதிகரிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பின் விளைவாக ஏற்பட்ட உலகளாவிய தேவைக்கதிகமான மிதமிஞ்சிய வழங்கலே காரணமாகும். எனினும், அதன் பின்னர், அவதானிக்கப்பட்ட பன்னாட்டு எண்ணெய் விலைகளின் மேல் நோக்கிய அசைவிற்கு பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பும் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பில் இல்லாத நாடுகளினதும் உற்பத்தியாளர்கள் உலகளாவிய மிகையான வழங்கலுக்கும் மத்தியில் தமது வெளியீடுகளை முடக்கி வைக்க இணங்கலாம் என்ற எதிர்பார்ப்பே முக்கிய காரணமாகக் காணப்பட்டது. இப்போக்கிற்கு, தளம்பலடைந்த ஐ.டொலரும் குறிப்பாக கனடா, நைஜீரியா, வெனிசுலா மற்றும் நோர்வே நாடுகளில் காணப்பட்ட வழங்கல் தடைகளும் உதவியாக அமைந்தன. எனினும், யூலை மாத காலப்பகுதியில் உலகளாவிய தேவைக்கதிகமான மிதமிஞ்சிய எண்ணெய் உற்பத்தி, எதிர்பாராத விதத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானிய வெளியேறுவதற்குச் சாதகமாக அளிக்கப்பட்ட வாக்குக் காரணமாகத் தோன்றிய நிச்சயமற்றதன்மை, எண்ணெய்க்கான கேள்வியிலான வளர்ச்சி குறைவடையும் என்ற எதிர்பார்ப்பு மற்றும் அநேகமான எண்ணெய் வழங்கல் தடைகள் முடிவடைவதற்கான அறிகுறிகள் என்பனவற்றின் காரணமாக விலைகள் வீழ்ச்சியடையும் போக்கினைக் கொண்டிருந்தன. அதன் பின்னர், பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பிலுள்ள சில உறுப்பு நாடுகள் வெளியீட்டினைக் கட்டுப்படுத்த முயற்சிக்கக்கூடும் என்ற புதிய ஊகங்களின் விளைவாக விலைகள் மீண்டும் உயர்வடைந்தன. 2016 செத்தெம்பரில் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு அதன் உற்பத்தியை நாளொன்றிற்கு 32.5 - 33.0 மில்லியன் பீப்பாய்களுக்கு மட்டுப்படுத்துவதற்கு இணங்கிக் கொண்டதுடன் ஒவ்வொரு நாட்டிற்குமான உற்பத்தி மட்டம் நவெம்பரில் நடைபெறும் வழமையான பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பினது கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது. இவ்வபிவிருத்திகளுடன் 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் சராசரி விலை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 61.67 உடன் ஒப்பிடுகையில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 43.44இற்கு 29.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 3.2 பன்னாட்டுச் சந்தையில் மசகு எண்ணெய்யின் (பிரன்ட்) சராசரி விலை மற்றும் இ. பெ. கூ. இன் மசகு என்னெய்க்கான இறக்குமதி விலை



- **பெற்றோலியத்திற்கான உள்நாட்டுக் கேள்வி தொடர்ந்தும் அதிகரித்தது.** இலங்கையில் எண்ணெயின் மிகப் பெரிய பாவனையாளராக விளங்கும் போக்குவரத்துத் துறைக்கான விற்பனைகள் கணிசமாக அதிகரித்தமைக்கு ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த உள்நாட்டு பெற்றோலிய விலைகளும் நாட்டின் அதிகரித்த ஊர்திகளின் எண்ணிக்கையும் காரணமாக விளங்கிய வேளையில் கூடியளவு எரிபொருள் எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கத்தின் விளைவாக, வலு உருவாக்கத் துறைக்கான விற்பனையும் கணிசமாக அதிகரித்தது. 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சிறப்பு டீசல் மற்றும் ஊர்திகளுக்கான டீசலினது உள்நாட்டு விற்பனைகள் முறையே 44.3 சதவீதத்தினாலும் 21.3 சதவீதத்தினாலும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. மேலும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் உள்நாட்டு பெற்றோலிய விற்பனைகள் 17.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து தனியார் ஊர்திகளின் அதிகரித்த பயன்பாட்டினைப் பிரதிபலித்தது. அதேவேளை, 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நாட்டின் அதிகரித்த மின்னூட்டலுக்கு மத்தியிலும் கூட உள்நாட்டு மண்ணெண்ணெய் விற்பனைகளும் 2015இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 6.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்கு தாழ்ந்த விலைகள் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான மண்ணெண்ணெயின் பயன்பாட்டினை ஊக்குவித்தமையும் குறிப்பாக கிராமிய மற்றும் பெருந்தோட்ட துறைகளில் சமையல் நோக்கங்களுக்கு இது பயன்படுத்தப்பட்டமையும் காரணங்களாக இருக்கக்கூடும்.

### மின் வலு

- **2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மின்வலு உருவாக்கம் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8,678 கிவாம இலிருந்து 9,375 கிவாம இற்கு 8.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.** ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நீர்மின் வலு உருவாக்கம் (சிறு நீர்மின் வலு உருவாக்கம் நீங்கலாக) அக்காலப்பகுதியில் நிலவிய மோசமான வானிலைநிலைமையின் காரணமாக 2,652 கிவாம இற்கு 8.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், மொத்த வலு உருவாக்கத்தில் நீர்மின் வலுவின் பங்கு ஆண்டின் நடுப்பகுதியில் படிப்படியாக அதிகரித்தமைக்கு 2016 மேயில் கிடைத்த பாரிய மழைவீழ்ச்சி உதவியாக அமைந்தது. நுரைச்சோலை நிலக்கரி வலுப் பொறியின் பேணலில் காணப்பட்ட தாமதத்திற்கிடையிலும் 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த நிலக்கரி வலு உருவாக்கம் 3,372 கிவாம இற்கு 1.4 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. தாழ்ந்த நீர்மின் வலு மற்றும் நிலக்கரி வலு உருவாக்கம் என்பனவற்றின் ஒன்றுசேர்ந்த தாக்கம் எண்ணெயினை அடிப்படையாகக் கொண்ட உருவாக்கம் 65.7 சதவீதத்தினால் 2,552 கிவாம இற்கு கணிசமாக அதிகரிக்கக் காரணமாயிற்று. அதேவேளை, இலங்கை மின்சபையின்படி, சிறிய நீர்மின் வலு உருவாக்கம் உட்பட மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினூடான மின்வலு உருவாக்கம் 798 கிவாம இற்கு 11.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நீர்மின் வலு, நிலக்கரி, எரிபொருள் எண்ணெய் மற்றும் பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கம் என்பனவற்றின் பங்கு முறையே 28 சதவீதமாகவும் 36

**அட்டவணை 3.2** மின்வலு விற்பனை

| விடயம் | 2014 | 2015 | 2015 சன-யூலை | 2016 சன-யூலை (அ) | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| இ.மி.சபையின் மொத்த விற்பனை (கி.வா.ம) | 11,063 | 11,786 | 6,741 | 7,349 | 9.0 |
| உள்நாடு | 3,521 | 3,876 | 2,215 | 2,431 | 9.8 |
| சமயரீதியான | 63 | 67 | 38 | 42 | 11.8 |
| கைத்தொழில் | 3,498 | 3,608 | 2,056 | 2,190 | 6.5 |
| பொது நோக்கம் | 2,194 | 2,324 | 1,333 | 1,489 | 11.8 |
| அரச | 134 | 152 | 83 | 94 | 12.2 |
| விடுதி | 192 | 205 | 120 | 140 | 17.1 |
| லங்கா மின்சார கம்பனிக்கு மொத்த விற்பனை | 1,352 | 1,446 | 833 | 899 | 7.9 |
| வீதி மின்விளக்கு | 108 | 108 | 63 | 63 | 0.6 |

மூலம்: இலங்கை மின்சார சபை

(அ) தற்காலிகமானது

வரைபடம் 3.3 மின்வலு உருவாக்கத்தின் கலவை (சன - ஓகத்)




சதவீதமாகவும் 27 சதவீதமாகவும் 9 சதவீதமாகவும் காணப்பட்டது. அதேவேளையில், 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வீடு, கைத்தொழில், பொதுவான நோக்கம், அரசாங்கம் மற்றும் சுற்றுலாத் துறைகளின் மின் வலுப் பாவனை முறையே 9.8 சதவீதத்தினாலும் 6.5 சதவீதத்தினாலும் 11.8 சதவீதத்தினாலும் 12.2 சதவீதத்தினாலும் 17.1 சதவீதத்தினாலும் அதிகரித்து நிலவுகின்ற தாழ்ந்த தீர்வைகளின் காரணமாக ஏற்பட்ட அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்தது. இதன் மூலம் 2016ஆம் ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மொத்த மின்வலு விற்பனை 2015ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 6,741 கிவாம இலிருந்து 7,349 கிவாம இற்கு 9.0 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், மொத்த உருவாக்கத்தின் சதவீதமாக மின் கடத்தி மற்றும் விநியோகத்தின் மீதான இழப்புக்கள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட 10.0 சதவீதம் மற்றும் 2005இல் பதிவுசெய்யப்பட்ட 17 சதவீதத்திலிருந்து 2016இன் முதல் ஏழு மாத காலப்பகுதியில் 9.6 சதவீதத்திற்கு மேம்பட்டது.

- **மின் வலுவினைப் பெறக்கூடியதாக இருந்தும் தமது வீடுகளுக்கு வெளிச்சத்தினைப் பெறமுடியாமலிருக்கும் குறைந்த வருமானமீட்டு வோருக்குச் சலுகை வீதங்களில் மின்வலுவை வழங்குவதற்காக “ரட்டம் எலியய் அந்துர துரலய்” நிகழ்ச்சித்திட்டமொன்றினை அரசாங்கம் தொடங்கியிருக்கிறது.** தற்பொழுது, கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் கண்டி மாவட்டங்கள் 100 சதவீத மின்னூட்டலைப் பெற்றுள்ளன. எனினும், இந்நிகழ்ச்சித்திட்டம் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களும் 100 சதவீத மின்னூட்டலைப் பெறுவதனை இலக்காகக் கொண்டுள்ளது. இலங்கை மின்சபையின் முயற்சிகள் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள 104 கிராமிய மின்னூட்டல் திட்டங்களையும் பல விரிவாக்கங்களையும் நிறைவுசெய்ததுடன் ஆண்டின் முதலரைப் பகுதியில் 21,549 வீடுகளுக்கு மின்னிணைப்புக்களையும் நிறைவுசெய்தது. இதன் மூலம் நாட்டின் மின்னூட்டல் மட்டம் 2015 இறுதியின் 98.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 யூன் இறுதியில் 98.7 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. மரவுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கம் அபிவிருத்தியைப் பொறுத்தவரையில், 2016இன் முதலரைப் பகுதியில் 9 சிறிய நீர்மின் வலுச் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் தேசிய மின்தொகுதிக்கு ஏறத்தாழ 13 மெகாவாட் சேர்க்கப்பட்டது. மேலும், 2016 யூன் இறுதியளவில் 6 மெகாவாட் இயலளவுடன் கூடிய 4 மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதேவேளை, மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கத்தினை அதிகரிப்பதன் மூலம் ஒவ்வொரு வீட்டினையும் நாட்டிலுள்ள நீடித்துநிலைத்திருக்கும் வலு உருவாக்கத்திற்கு வசதியளிக்கின்ற விதத்தில் ஒவ்வொரு வீட்டினையும் நுண்பாக வலுப் பொறியிடமாக மாற்றும் நோக்குடன் 2016 செத்தெம்பரில் “சூரிய பாலா சங்கிரமய” என அழைக்கப்படும் புதிய சனசமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கச் செயற்றிட்டத்தினை அரசாங்கம் மேற்கொண்டது.

வரைபடம் 3.4 புதிய மின்வலு இணைப்புக்களும் மின் இணைப்பு மட்டமும்



இந்நிகழ்ச்சித்திட்டமானது சூரிய சக்தி தட்டுக்களை வீட்டலகுகளுக்கு சலுகை வீதங்களில் வழங்குவதன் மூலம் நாடு முழுவதிலுமுள்ள ஒரு மில்லியன் வீடுகளுக்கு சூரிய வலு அலகுகளை நிறுவுவதற்கு எதிர்பார்க்கிறது.

### வீதி அபிவிருத்தி

- **2016இல் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்ட முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளிலொன்றாக வீதி அபிவிருத்தி தொடர்ந்தும் இருந்து வருகின்றது.** வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பேணப்பட்டு வரும் விரைவுப்பாதை உட்பட தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 2016 சனவரி - யூன் காலப்பகுதியில் 12,380 கி.மீற்றராக மாற்றமின்றிக் காணப்பட்டது. இதே காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 4,662 பாலங்கள் பேணப்பட்டன. 2016இன் முதலரைப் பகுதியில் வீதிகள் மற்றும் பாலங்களின் பேணல், புனரமைப்பு மற்றும் அபிவிருத்திகள் மீதான மொத்தச் செலவினம் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.70.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ரூ.38.4 பில்லியனாகக் காணப்பட்டது.

- **2016இன் முதலரைப் பகுதியில் தேசிய விரைவுப் பாதை வலையமைப்பிற்கான விரிவாக்கத்தின் கட்டுமான வேலைகள் தொடர்ந்தும் இடம்பெற்றன.** புதிய முக்கிய வீதி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் 2016இன் முதலரைப் பகுதியில் ஆரம்பிக்கப்படாத போதும் கூட, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான ஆரம்ப வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அம்பாந்தோட்டை துறைமுகத்தினையும் மத்தள பன்னாட்டு வானூர்திநிலையத்தினையும் இணைக்கின்ற மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலான தென்பகுதி விரைவுப் பாதைச் செயற்றிட்டத்தினது விரிவாக்கம் தொடர்பான குடிசார் வேலைகள் மீதான நிதியிடல் தொடர்பான கடன் உடன்படிக்கைகள் அரசாங்கத்தினாலும் சீனாவின் எக்சிம் வங்கியினாலும் கையெப்பமிடப்பட்டன. திட்டமிடப்பட்ட விரிவாக்கத்தின் மொத்த நீளம் 92 கி.மீற்றராக விளங்கியதுடன் மாத்தறையிலிருந்து பெலியத்த (30கி.மீற்றர்) பெலியத்திலிருந்து வெட்டியா வரை (26கி.மீற்றர்) வெட்டியாவிலிருந்து அந்தரவேவா வரை (15 கி.மீற்றர்) மற்றும் மத்தளவிலிருந்து அன்டிவேவா உடன் அம்பாந்தோட்டை (21கி.மீற்றர்) வரையான 4 தனித்தனியான பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. 4 பிரிவுகளின் குடிசார் உடன்படிக்கைகள் கட்டுமானத்தினைத் தொடங்கும் விதத்தில் கையாளப்பட்டுள்ளன. கடவத்தையிலிருந்து தம்புள்ளை பொத்துகர - கலகெதர மற்றும் மீரிகம - அம்பேபுச இணைப்புக்களை உள்ளடக்கிய மத்திய விரைவுப் பாதையின் பொருளாதாரச் சாத்திவள ஆய்வு இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு, கட்டுநாயக்கா விரைவுப் பாதையுடன் கடவத்தை இடைமாற்று மற்றும் கெறவலப்பிட்டியா இடைமாற்று என்பனவற்றை இணைக்கின்ற வெளிச்சுற்று வட்ட நெடுங்சுாலையின் கட்டம் III இன் பொறியியல் வடிவமைப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டது. இப்பிரிவின் மொத்த நீளம் 9.6 கி.மீற்றராகும். 2016 யூன் இறுதியில் இச்செயற்றிட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 9.9 சதவீதமாகக் காணப்பட்டது. இது நிறைவடைந்ததும், இது அனைத்து விரைவுப் பாதைகளையும் கொழும்பிலிருந்து ஆரைவடிவில் பிரிந்துசெல்லும் ஒரு சில முக்கிய வீதிகளையும் இணைக்கும். இதன் மூலம் கொழும்பு மெற்றோபொலிட்டன் பிரதேசத்தின் போக்குவரத்து நெரிசல் குறைக்கப்படும். அதேவேளை, வீதிகளினதும் பாலங்களினதும் புத்தாக்கமும் மேம்பாடும் 2016இன் முதலரைப் பகுதியிலும் தொடர்ந்தது.

- **முக்கிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும் வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காகவும் தொடர்ச்சியாக வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இதனைப் பொறுத்தவரை, பெலிகன் கடவைகளை நிறுவியமை போக்குவரத்து சமிக்ஞைகளை நிறுவியமை, முன்னேற்றங்கண்ட போக்குவரத்து முகாமைத்துவ முறைமையினை ஏற்படுத்தியமை, அட்டவணையிடப்பட்ட மேம்பாலங்களின் நிருமாணம் என்பனவற்றை முக்கியமாக எடுத்துக்காட்ட முடியும். 2016 ஓகத்தில் இராஜகிரிய சந்தியில் தொடங்கப்பட்ட மேம்பால நிருமாணம் 2018 இறுதியில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது கொரிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரின் கொடையின் மூலம் நிதியிடப்பட்ட முன்னேற்றங்கண்ட போக்குவரத்து முகாமைத்துவ முறைமைச் செயற்றிட்டம் விபரமாக வடிவமைக்கப்பட்ட கட்டத்தில் காணப்படகின்றது. முன்னேற்றங் கண்ட போக்குவரத்து முகாமைத்துவச் செயற்றிட்டத்தின் நோக்கம் யாதெனில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, போக்குவரத்துப் பாதுகாப்பினைப் பலப்படுத்தி பொதுப்

போக்குவரத்தினை மேம்படுத்துவதன் மூலம் கொழும்பு மெட்ரோ பொலிட்டன் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதேயாகும்.

## வீதிப் பயணிகள் போக்குவரத்து

- **2016இன் முதலரைப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபையின் அரச பயணிகள் போக்குவரத்து சிறிதளவில் மேம்பட்டது.** இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் தொழிற்படுத்தப்பட்ட பேருந்துகளின் மொத்த தொழிற்பட்ட கிலோமீற்றர் 5.7 சதவீதத்தினால் 222.8 மில்லியன் கி.மீற்றருக்கு அதிகரித்த வேளையில் மொத்தப் பயணிகள் கி.மீற்றரும் 2016இன் முதலரைப் பகுதியில், 2015இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 7,780 மில்லியன் கி.மீற்றருக்கு 7.5 சதவீதத்தினால் அதிகரித்தது. முதல் ஆறு மாத காலப்பகுதியில், நாளொன்றிற்கு தொழிற்பட்ட சராசரி பேருந்துகளின் எண்ணிக்கை 5,306 இற்கு 165 சதவீதத்தினால் மேம்பட்டது. எனினும், 2016இன் முதலரைப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபையின் மொத்த பேருந்துத் தொகுதி 7,778 இற்கு 269 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பயன்படுத்தப்பட முடியாத பேருந்துகள் ஏலத்திற்கு விடப்பட்டமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, 2016 யூன் இறுதியில் தனியார் துறை தொழிற்பாட்டாளர்களுக்குச் சொந்தமான சராசரி பேருந்துகளின் தொகுதி, 2015 இறுதியின் 19,397 பேருந்து தொகுதிகளுடன் ஒப்பிடுகையில் 20,329 இற்கு அதிகரித்தது. இதே போன்று 2016 யூன் இறுதியில் தொழிற்பட்ட சராசரியும் 2015 இறுதியின் 16,942 உடன் ஒப்பிடுகையில் 18,359 ஆகக் காணப்பட்டது. இருப்பினும்கூட, தனியார் பேருந்துகளின் தொழிற்பட்ட கி.மீற்றர் 4.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் பயணிகள் கி.மீற்றர் 14.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

- **தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் கிராமிய மக்களுக்கும் நம்பகமானதும் பாதுகாப்பானதும் சிக்கனமானதுமான பணிகளை வழங்கும் பொருட்டு தொடர்ந்தும் சிசுசெறியா மற்றும் கெமிசாறியா பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.** 2016இல் அரசாங்கம் ரூ.600 மில்லியன் மற்றும் ரூ.23.5 மில்லியனை முறையே சிசுசெறியாவிற்கும் கெமிசெறியாவிற்கும் ஒதுக்கியது. மேலும், பின்னிரவிலும் அதிகாலை வேளைகளிலும் பயணிகளுக்கு நம்பகமானதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்துப் பணிகளை வழங்குவதற்காக நிசி செறியா செயற்றிட்டத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தொடர்ந்தும் ஈடுபட்டது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 2016இன் முதலரைப் பகுதியில் நம்பகமான, பாதுகாப்பான மற்றும் சௌகரியமான தனியார் பேருந்து சேவைகளை பயணிகளுக்கு வழங்குவதற்கான செயற்றிட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. வருடாந்த திருத்தங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் பேருந்துக் கட்டணங்கள் 2016 ஓகத்து 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 6 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.

- **2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் புதிய உந்து ஊர்திகளின் பதிவுகள் 2015இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** இக்காலப்பகுதியில், பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளின் மொத்த எண்ணிக்கை 355,155 இற்கு 27.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சரக்கு வண்டிகள், உழுபொறிகள் மற்றும்

**அட்டவணை 3.3 உந்து ஊர்திகளின் புதிய பதிவு**

| விடயம் | 2014 | 2015 | 2015 சன-செத் | 2016 சன-செத்(அ) | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| உந்து ஊர்திகளின் புதிய பதிவு | 429,556 | 668,907 | 491,632 | 355,155 | (27.8) |
| பேருந்துகள் | 3,851 | 4,140 | 3,264 | 2,011 | (38.4) |
| தனியார் மோட்டார் வாகனங்கள் | 38,780 | 105,628 | 74,966 | 33,198 | (55.7) |
| 1000சிசி இற்கு குறைவான மோட்டார் வாகனங்கள் | 5,781 | 60,641 | 38,922 | 17,256 | (55.7) |
| முச்சக்கர வண்டிகள் | 79,038 | 129,547 | 96,987 | 40,314 | (58.4) |
| இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் | 20,799 | 39,456 | 29,442 | 19,336 | (34.3) |
| உந்து ஈருருளிகள் | 272,885 | 370,889 | 273,691 | 245,350 | (10.4) |
| சரக்கு கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | 5,121 | 7,142 | 5,459 | 5,326 | (2.4) |
| நில ஊர்திகள் | 9,082 | 12,105 | 7,823 | 9,620 | 23.0 |

(அ) தற்காலிகமானது

மூலம்: உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களம்

இழுபொறிகள் தவிர்ந்த மற்றும் அனைத்து ஊர்தி வகைகளும் இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன. இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் மற்றும் முச்சில்லு வண்டிகளின் பதிவுகள் முறையே 34.3 சதவீதத்தினாலும் 58.4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்த வேளையில் உந்து ஊர்திகளின் பதிவுகள் 55.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மீள் பரிசீலனையின் கீழான காலப்பகுதியில் ஊர்திகளுக்கான புதிய பதிவுகள் 38.4 சதவீதத்தால் குறைவடைந்தன. 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஊர்திகளின் பதிவில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான மேல் நோக்கிய வரித் திருத்தங்களும் ரூபாவின் தேய்மானமும் வட்டி வீதங்களின் படிப்படியான அதிகரிப்பும் பெருமளவிற்குத் தூண்டுதலாக விளங்கின.

## புகைவண்டிப் போக்குவரத்து

- **2016இன் முதலரைப் பகுதியில் இலங்கை புகைவண்டிப் பகுதியின் பயணிகள் கி.மீற்றர் தொடர்ந்தும் அதிகரித்தது.** இக்காலப்பகுதியில் புகைவண்டிப் பயணிகள் கி.மீற்றர் 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.5 பில்லியன் கி.மீற்றருடன் ஒப்பிடுகையில் 3.6 பில்லியன் கி.மீற்றருக்கு 2.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஒப்பீட்டு ரீதியில் குறைந்த தீர்வை காணப்படுகின்றமை, கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் அதிகரிக்கின்ற வீதிப் போக்குவரத்து மற்றும் வட மாகாணத்தில் புகைவண்டிப் பணிகள் விரிவடைந்தமை என்பன உதவியளித்தன. 2016இன் முதலரைப் பகுதியில் பொருட்கள் கி.மீற்றரும் 67.3 மில்லியன் மெற்றிக்தொன் கி.மீற்றருக்கு 3.7 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, இலங்கைப் புகைவண்டிப் பகுதி பணியின் தரத்தினையும் புகைவண்டி முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினையம் மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கையையும் ஆரம்பித்து மேற்கொண்டு வருகின்றது. பெல்ஜியத்தின் நிதி உதவியின் கீழ் பாலங்களின் புனரமைப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்பம் மற்றும் நிதியியல் உதவியின் கீழ் கொழும்பு புறநகர்ப் பகுதியின் புகைவண்டிச் செயற்றிட்டங்கள் தொடர்பான சாத்தியவள ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டமை, திருகோணமலையிலிருந்து நுரைச்சோலைக்கு நிலக்கரியைக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் கண்டி - பேராதனை மற்றும் களணிப் பள்ளத்தாக்கிற்கான புகைவண்டி பேருந்து பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை போன்றன இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல முக்கியமான விடயங்களாகும்.

## வான்வழிப் போக்குவரத்து

- **2016இன் முதலரைப் பகுதியில் நாட்டின் வான்வழிப் போக்குவரத்துத் துறை உயர்ந்த வளர்ச்சி வேகத்தினைக் காட்டியது.** 2016இன் முதலரைப் பகுதியில் அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தினூடான வான் பயணிகளின் போக்குவரத்து 4.5 மில்லியனுக்கு 9.4 சதவீத வளர்ச்சியைப் பதிசெய்தது. 2016இன் முதலரைப் பகுதியில் மாறிச்செல்லும் பயணிகளின் வருகையும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.6 மில்லியனுக்கு 2.3 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், 2016இன் முதலரைப் பகுதியில் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தினூடான சரக்குப் போக்குவரத்தின் மொத்த அளவும் 135,377 மெற்றிக் தொன்னுக்கு 26.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தில் கையாளப்பட்ட வானூர்திகளின் மொத்த எண்ணிக்கையான 31,651 இற்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 2016இன் முதலரைப் பகுதியில் 2015 பெப்புருவரியிலிருந்து மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்திநிலையத்திற்கான சிறிலங்கன் எயார்லையின்ஸின் கிரமமான தொழிற்பாடுகளை அரசாங்கம் இடைநிறுத்தியமையின் காரணமாக 670 வானூர்திகளை மாத்திரமே கையாண்டது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்திநிலையம் 1,652 பயணிகளை மட்டுமே கையாண்டது. 2016 யூன் இறுதியில் 30 பன்னாட்டு வானூர்தி நிறுவனங்கள் (5 ஒப்பந்த அடிப்படையிலான வானூர்தி நிறுவனங்கள், சிறிலங்கன் எயார்லையின், மிகின் லங்கா மற்றும் 3 சரக்கு வானூர்தி நிறுவனங்கள்) இலங்கைக்கு பணியாற்றிய வேளையில் 7 உள்நாட்டு வான் நிறுவனங்களும் தொழிற்பட்டன. அதேவேளை, அரசாங்கம், நடுத்தர காலத்தில் பொருளாதார ரீதியில் ஆற்றல்வாய்ந்த மாற்று வழிகளை உருவாக்கக்கூடிய வியாபார மீளமைப்புத் திட்டங்களை தயாரிக்குமாறு சிறிலங்கன் எயார்லையின்ஸ்சுக்கும் மிகின் லங்காவிற்கும் பணிப்புரைகளை விடுத்தது.

- **பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் விரிவாக்கச் செயற்றிட்டத்தின் கட்டம் II நிலை II இன் கட்டுமான வேலைகளுக்கான இரண்டாவது கடன் உடன்படிக்கை 2016 மாச்சில் கையொப்பமிடப்பட்டமையின் மூலம் செயற்றிட்டத்தின் எஞ்சிய நிதியிடல் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கப்பட்டது.** இச்செயற்றிட்டமானது பன்னாட்டு வானூர்தி நிலையமொன்றின் பாதுகாப்பு தேவைப்பாட்டிற்கு ஏற்றவிதத்தில் கட்டுப்படவுள்ள இரண்டு பயணிகள் முனைக்கோடியுடன் கூடிய பல்-அடுக்கு முனைக்கோடி, உள்ளக வசதிகளைக் கொண்ட பொதிகளின் கையாளல் முறைமை, கண்காணிப்பு அம்சங்களுடன் கூடிய அணுகத்தக்க கட்டுப்பாட்டு முறைமைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. இச்செயற்றிட்டம் நிறைவடைந்ததும் ஆண்டொன்றிற்கான தற்போதைய இயலளவான 6 மில்லியன் பயணிகளின் போக்குவரத்தானது 15 மில்லியனுக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் வானூர்தி நிலையத்தின் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் விரிவடைவதன் மூலம் பயணிகளின் வசதியும் மேம்படுத்தப்படுகின்றது. அதேவேளை, வானூர்திகளின் பாதுகாப்பான தொழிற்பாடுகளுக்காக மேல் தரையின் நிலைமையினை மேம்படுத்துவதற்காக "பண்டாரநாயக்கா வானூர்திநிலையத்தில் ஓடுபாதைக்கு மேற்தளமிடல் மற்றும் அதனுடன் இணைந்த வேலைகள்" என்ற பெயரிலான செயற்றிட்டத்திற்காக விலைக்குறிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டமானது தற்போதுள்ள ஓடுபாதையை அகலமாக்கி மேற்தளமிடுதல், தற்போதுள்ள சமாந்தரமான டைக்சி ஓடுபாதையின் வடபாகத்திற்கு மேற்தளமிடல் தற்போதுள்ள டைக்சி ஓடுபாதையினை விரிவாக்குதல், புதிய விரைவான வெளியேறும் டைக்சி ஓடுபாதை மற்றும் சுற்றிச்செல்லும் டைக்சி ஓடுபாதை என்பனவற்றின் நிருமாணம் புதிய வான் தளதரைக்கு ஒளியூட்டலை நிறுவுதல் மற்றும் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தில் வானூர்தி தரிப்பிடத்திற்கு வெளியேயான வானூர்தி ஊர்ந்து செல்லும் தற்போதைய பாதைப் பகுதியினை திருத்தியமைத்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. இச்செயற்றிட்டத்தினை 2017 ஒகத்தில் நிறைவுசெய்ய அட்டவணையிடப்பட்டுள்ளது. எயார்போர்ட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் லங்கா லிமிடெட் இன்படி 2017 சனவரி 6ஆம் திகதியிலிருந்து தொடங்கி மூன்று மாத காலப்பகுதிக்கு வானூர்திகளின் தொழிற்பாடுகளுக்காக 8 மணித்தியாலங்கள் ஓடுபாதையினை மூடிவைப்பதற்கு முன்மொழியப்பட்டிருக்கிறது. இது ஏறத்தாழ பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தின் மொத்தப் பறப்புக்களின் போக்குவரத்தில் ஏறத்தாழ 10 சதவீதத்தினை பாதிக்கக்கூடும்.

### துறைமுகப் பணிகள்

- **2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் துறைமுகத் துறையின் செயலாற்றம் தொடர்ந்தும் மேம்பட்டது.** 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கொழும்புத் துறைமுகத்தில் மொத்த கொள்கலன் கையாளல் கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9.4 சதவீதத்தினால் 4,255,481 இருபது அடிக்குச் சமமான அலகுகளுக்கு அதிகரித்தது. 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் மொத்தச் சரக்குக் கையாளல், 2015இன் தொடர்பான காலப்பகுதிக்கெதிராக 64.5 மில்லியன் மெ.தொன்னுக்கு 11.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட்ட மொத்தக் கொள்கலன்கள் 2015ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீதம் கொண்ட எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டியது. எனினும், 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கொழும்பு இன்ரநஷனல் கொன்ரைனர் டேர்மினல் மற்றும் சவுத் ஏசியா கேட்வே டேர்மினல் என்பனவற்றின் மொத்தக் கொள்கலன் கையாளல் முறையே 27.7 சதவீதத்தினாலும் 13.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. மேலும், இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஜெயா கொள்கலன் இறங்குதுறையிலோ அல்லது சவுத் ஏசியா கேட்வே டேர்மினலிலோ கையாளப்பட முடியாத பாரிய கொள்கலன் கலம்களை கொழும்பு இன்ரநஷனல் கொன்டைனர் டேர்மினல் கையாண்டது. 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்தக் கலன்கள் 2.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு, மீளாய்விற்குரிய காலப்பகுதியில்

**அட்டவணை 3.4 துறைமுகப் பணிகளின் செயலாற்றம்**

| விடயம் | 2015 சன-செத் | 2016 சன-செத்(அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| கையாளப்பட்ட மொத்தச் சரக்கு (மெ.தொ. '000) | 57,860 | 64,502 | 11.5 |
| கையாளப்பட்ட மொத்தக் கொள்கலன்கள் (இ.ச.அ. '000) | 3,888 | 4,255 | 9.4 |
| மாற்றி கப்பலேற்றல் (இ.ச.அ. '000) | 2,985 | 3,304 | 10.7 |

மூலம்: இலங்கை துறைமுக அதிகாரசபை

(அ) தற்காலிகமானது

உள்நாட்டு கலம்களின் கையாளல் 56.0 சதவீத வீழ்ச்சியைக் காட்டியமைக்கிடையிலும் மாற்றிக் கப்பலேற்றும் ஊர்திகளின் எண்ணிக்கை (39.3 சதவீதம்) அதிகரித்தமையே காரணமாகும்.

- **சில துறைமுகச் செயற்றிட்டங்களின் நிருமாண நடவடிக்கைகள் நிறைவடைந்திருப்பதுடன் 2016இன் முதலரைப் பகுதியில் இச்செயற்றிட்டங்களின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை துறைமுக அதிகாரசபையும் அரச தனியார் பங்குடமையினூடாக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனைக்கோடியை அபிவிருத்தி செய்வதற்கு 2016 பெப்புருவரியில் கொடுக்கல்வாங்கல் மதியுரைப் பணிகள் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபையினை மீளமைத்தல், எண்ணெய் மற்றும் வாயு கையாளலின் போது ஏற்படும் அவசரகால நிலைமைகளைக் கட்டுப்படுத்துதல், பயணிகள் மற்றும் உல்லாசக் கப்பல் தொழிற்பாடுகள் அதேபோன்று போக்குவரத்து அபிவிருத்தித் திட்டங்கள் என்பன உள்ளிட்ட இலங்கை துறைமுகங்கள் அனைத்தையுமுள்ளடக்கிய இலங்கைக்கான தேசிய துறைமுக முதன்மைத் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கான உதவிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புதலளித்துள்ளது. மேலும், அம்பாந்தோட்டைத் துறைமுகச் செயற்றிட்டத்தில் கட்டம் II இன் நிருமாண வேலைகள் 2017 ஏப்பிறலில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வரைபடம் 3.5 கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் மற்றும் சரக்குகையாளல்**




### சமூக உட்கட்டமைப்பின் அபிவிருத்திகள்

#### நலம்

- **நாட்டின் ஆரம்ப நலக் கவனிப்பு வலையமைப்பினை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது.** கர்ப்பிணைத் தாய் மற்றும் சேய் மரணம் மற்றும் வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் போன்ற நாட்டின் நலக் குறிகாட்டிகள் கடந்த காலத்தில் உறுதியான முன்னேற்றத்தினைக் காட்டின. கர்ப்பிணித் தாய்மார் மரண விகிதம் 2014இல் அறிக்கையிடப்பட்ட ஒவ்வொரு 100,000 உயிருடனான பிறப்பிற்கும் 32 இலிருந்து 2015இல் ஒவ்வொரு 100,000 உயிருடனான பிறப்புக்களுக்கும் 30 இற்குக் குறைவடைந்த வேளையில் குழந்தைகள் மரண வீதம் 2015இல் ஒவ்வொரு 1,000 உயிருடனுமான பிறப்புக்களுக்கும் 10 ஆக அறிக்கையிடப்பட்டது. இக்குறிகாட்டிகளில் ஏற்பட்ட முன்னேற்றம் முனைப்பானதாகக் காணப்படுவதற்கு, அரச நலக் கவனிப்பு முறைமையின் மிக முக்கியமானதொரு கூறாக கர்ப்பிணித் தாய் மற்றும் சேய் நலக் கவனிப்பு நிகழ்ச்சித்திட்டம் தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டமையே காரணமாகும். அதேவேளை அண்மைய கடந்த காலத்தில் பிறந்து ஒரு மாதத்திற்குள்ளேயான சிசுக்களின் மரண வீதம் ஒவ்வொரு 1,000 உயிருடனான பிறப்பிற்கும் 5 - 7 ஆகக் காணப்பட்டது. வைத்தியசாலைகளில் மகப்பேற்று மற்றும் புதிய குழந்தைகளின் பிறப்பு நலக் கவனிப்புப் பணிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **2016இன் முதலரைப் பகுதியில், மனித மூலவளங்கள் மற்றும் நலத் துறையின் பௌதீக உட்கட்டமைப்புத் தளத்தினை மேலும் மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது.** 2016 யூன் இறுதியில் அரச வைத்தியசாலைகளில் 19,441 தகைமைபெற்ற வைத்தியர்கள் ஒவ்வொரு 1,089 ஆட்களுக்கும் ஒரு வைத்தியர் என்ற ரீதியிலும் 32,362 தகைமைபெற்ற தாதியர்கள் ஒவ்வொரு 654 ஆட்களுக்கும் ஒரு தாதியர் என்ற அடிப்படையிலும் காணப்பட்டனர். மேலும், நாட்டில் 76,949 படுக்கைகளுடன் 610 அரச வைத்தியசாலைகள் காணப்பட்டதுடன் 2016 யூன் இறுதியில் ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கும் 3.6 படுக்கைகள் காணப்பட்டன. நலத் துறையில் பல அபிவிருததிச் செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், 2016இன் முதலரைப்

பகுதியில் பல பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன. இரத்தினபுரி மாவட்டப் பொது வைத்தியசாலையில் விபத்துப் பணிகள் பிரிவு திறந்து வைக்கப்பட்ட வேளையில் 19 பிரதேச இரத்த வங்கிகளின் கட்டுமானமும் தரமுயர்த்தலும் நிறைவடைந்தன. மேலும, மகரகம புற்றுநோய் தேசிய நிறுவகத்தில் அதிநவீனத்துவம் வாய்ந்த புற்றுநோய் வார்ட் கட்டடத் தொகுதியின் நிருமாண வேலைகள் நிறைவடைந்துள்ளதுடன் சாதனங்களின் கொள்வனவு தற்பொழுது இடம்பெற்று வருகின்ற வேளையில் வவுனியா வைத்தியசாலையில் வார்ட் கட்டடத் தொகுதியின் நிருமான வேலைகள் நிறைவடைந்துள்ளன. மேலும், இலங்கை தேசிய வைத்தியசாலையில் வலிப்பு நோய்ப் பிரிவு, களுத்துறை மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் திணைக்கள கட்டடமும், கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுகள் விரிவாக்கம் மற்றும் சிகிச்சைக் கட்டடம் இலங்கை பல் சிகிச்சை நிறுவகத்தின் அபிவிருத்தி, மாவட்ட பொது வைத்தியசாலை - அம்பாந்தோட்டை மற்றும மாவட்ட பொது வைத்தியசாலை நுவரெலியா என்பனவற்றின் நிருமாண வேலைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றன. அதேவேளை 2016 யூன் இறுதியில் 22,802 பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்களையும் 4,845 படுக்கைகளையும் கொண்ட 98 ஆயுர்வேத வைத்தியசாலைகளும் காணப்படுகின்றன.

- **கடந்த ஒரு சில ஆண்டுகளில் டெங்கு பரவுவதனை வலுவானதொரு முறையில் குறைப்பது சாத்தியமற்றதாகியமையினால் டெங்கு பரவுவது தொடர்ந்தும் பாரிய சவால்மிக்க நலத் துறைப் பிரச்சனையாக இருந்துவருகிறது.** 2016இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் டெங்கு நோயாளரின் எண்ணிக்கை 2015இன் தொடர்பான காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட 21,261 உடன் ஒப்பிடுகையில் 42,711 இற்கு கணிசமாக அதிகரித்த வேளையில், 2016 யூலையில் மாத்திரம் 10,636 டெங்கு நோயாளர்கள் அறிவிக்கப்பட்டனர். இவ்வதிகரித்துச் செல்லும் போக்கிற்கு கொந்தளிப்பான வானிலை நிலைமைகள், உயர் வெப்பநிலை மற்றும் பாரிய மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளம் என்பனவே முக்கியமான காரணங்களாகும். மொத்த நோயாளர்களில் ஏறத்தாழ 50 சதவீதத்தினர் மேல் மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்டனர். இம்மாகாணங்களில் இடம்பெற்றுவரும் தீவிரமான நகரமயமாதல் டெங்கு நுளம்புகளுக்கு மிகச் சிறந்த இனப்பெருக்கத் தளமாக விளங்கி வருகின்றது. டெங்கினைத் தடைசெய்யவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்குமாக நல ஊட்டச்சத்து சுதேச மருத்துவ அமைச்சு சனாதிபதி செயலாணிக் குழுவுடன் இணைந்து நுளம்பினைக் கட்டுப்படுத்தலை மேற்கொண்டதுடன், நுளம்பு பெருகும் இடங்களை ஒழிப்பதற்காக வீடுகளையும் நிறுவனங்களையும் பரிசோதித்தல், நுளம்பு பெருகும் இடங்களை அடையாளங்கண்டு நுளம்பினை ஒழிக்கும் கள அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், அனைத்துப் பிரதேசங்களிடையேயும் நுளம்பு கொல்லி மருந்துகளை விநியோகித்தல், நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய கட்டுப்பாட்டு அலகுகளை நிறுவுதல் போன்ற நுளம்பினைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. மேலும், சில தென்னாபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பரவிவரும் சிகா தொற்றுக் காரணமாக நல அமைச்சு சிகா தொற்றுநோய்க்கு ஆளாகியவர்களை கண்டறிந்து கொள்வதற்கு விசேட கண்டறியும் வசதிகளை பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்திநிலையத்தில் ஏற்படுத்தியுள்ளது.

- **ஆய்விற்குரிய காலப்பகுதியில் நலக் கவனிப்பு வசதிகளை வழங்குவதில் தனியார் துறையின் பங்களிப்புத் தொடர்ந்தும் அதிகரித்தது.** 2016 யூன் இறுதியில் 306 படுக்கைகளுடன் கூடிய 17 ஆயுர்வேத வைத்தியசாலைகள் உட்பட நாட்டில் 6,028 படுக்கைகளுடன் 193 பதிவுசெய்யப்பட்ட தனியார் வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. மேலும், தற்பொழுது 472 பதிவுசெய்யப்பட்ட மருத்துவ மற்றும் மருத்துவ ஆலோசனை வழங்கும் நிலையங்களும் 878 பதிவுசெய்யப்பட்ட மருத்துவ ஆய்வுகூடங்களும் 1,937 முழுநேர மற்றும் பகுதிநேர மருத்துவ சிகிச்சை நிலையங்களும் 2016 யூன் முடிவில் தொழிற்பட்டன. தனியார் நலக் கவனிப்புத் துறையில் அவதானிக்கப்பட்ட அபிவிருத்திகளை வலியுறுத்துகின்ற விதத்தில் சுற்றுலாக் கைத்தொழிலில் இடம்பெற்று வருகின்ற முன்னேற்றங்களுடன் சேர்த்து மருத்துவம் சார்ந்த சுற்றுலாவினை மேம்படுத்த இலங்கைக்கு வாய்ப்பளிக்கப்படும். எனினும், தனியார் நலப் பணிகள் வெளிநாட்டுக் கேள்வியைக் கவர்வதற்கு ஒழுங்குவிதிகள், மதிப்பீட்டுச் செயன்முறைகள் மற்றும் தனியார் நலத் துறை நிறுவனங்களினால் வழங்கப்படும் பணிகளின் தரத்தினை மதிப்பீடு செய்தல் என்பனவற்றை வலுப்படுத்துவது அவசியமானதாகும்.

## கல்வி

- **2016இன் முதலரைப் பகுதியில் பொதுக் கல்வி துறை முன்னேற்றமொன்றினைக் காட்டியது.** கல்வி அமைச்சின்படி நாட்டிலுள்ள பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 2015இல் 10,977 (பன்னாட்டுப் பாடசாலைகள் நீங்கலாக) ஆகக் காணப்பட்டதுடன் இதில் 10,144 அரச பள்ளிக்கூடங்களாகக் காணப்பட்டன. 2016இன் முதலரைப் பகுதியில் அரசாங்கம் இரண்டு தகைமை வகைகளின் கீழ் 490 ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்தது. இதில், 23 ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட வேளையில் எஞ்சிய 467 ஆசிரியர்களும் மாகாணப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர். எனினும், நாட்டின் 5-16 வயது (தரம் 1-11) தொகுதியினரின் தேறிய சேர்தல் விகிதம் 2015இல் 96.26 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை ஆண் மற்றும் பெண் மாணவர்களின் தேறிய சேர்தல் விகிதம் முறையே 96.75 சதவீதமாகவும் 95.76 சதவீதமாகவும் காணப்பட்டது. உள்வாரி மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு முறைமைகளின் கீழ் பள்ளிக்கூடங்களை மதிப்பிடும் நிகழ்ச்சித்திட்டம் 2016இன் முதலரைப் பகுதியிலும் தொடர்ந்தும் இடம்பெற்றதுடன் ஏறத்தாழ 8,500 ஆசிரியர்கள் வெளிவாரியாக மதிப்பீடு செய்யப்பட்டனர்.

- **2016இன் முதலரைப் பகுதியில் கல்வி அமைச்சு உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதில் தொடர்ந்தும் ஈடுபட்டது.** இவ்வபிவிருத்தியானது மூன்று செயற்றிட்டங்களை உள்ளடக்கியிருந்தது. செயற்றிட்டம் - 1 மாணவர்கள், பள்ளிக்கூடத்தி லிருந்து விலகுவோர் அதேபோன்று அப்பிரதேசத்திலுள்ள சமூகத்தினர் ஆகியோரின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப அறிவினை உயர்த்துகின்ற குறிக்கோளுடன் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாந்தரப் பள்ளிக்கூடங்களில் தொழில்நுட்பவியல் ஆய்வுகூடங்களை நிருமாணிப்பதில் கவனம் செலுத்தியது. இதன் கீழ் ஒன்பது மாகாணங்களிலும் 1,005 தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இதில் 991 ஆய்வுகூடங்கள் 2016 இறுதியில் நிறைவடைந்துவிட்டன. இவற்றில் 840 ஆய்வுகூடங்கள் 2016இன் முதலரைப் பகுதியில் இறுதியில் நன்கு செயற்பட்டன. செயற்றிட்டம் - 2 இன் கீழ், 251 இரண்டாந்தரப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்பப் பாடநெறிக்கு வசதியளிப்பதற்காக தொழில்நுட்பப் பீடங்களை நிருமாணிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 2016இன் முதலரைப் பகுதியில் இறுதியில் 211 தொழில்நுட்பப் பீடங்களின் நிருமாண வேலைகள் நிறைவடைந்ததுடன் இதில் 78 தொழில்நுட்பப் பீடங்கள் தற்பொழுது தொழிற்பட்டு வருகின்றன. செயற்றிட்டம் - 3, 2016 வரவு செலவுத்திட்டதின் கீழான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களையம் அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் கிராமிய மற்றும் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியர் தங்கும் விடுதிகளையும் ஓய்வு அறைகளையும் நிறுவுதல், 2016 இறுதியளவில் அனைத்துப் பாடசாலைகளிலும் சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துதல், 3,577 ஆரம்பப் பாடசாலைகளையும் 1,000 இரண்டாந்தரப் பாடசாலைகளையம் தரமுயர்த்தல், க.பொ.த உயர்தரத்துடன் 1,360 பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பள்ளிக்கூடங்களில் பற்சுகாதார வசதிகளை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

- **இலங்கையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள உயர் கல்வி வசதிகளை விரிவாக்குவதற்கு அரசல்லாத் துறை உயர் கல்வி நிறுவனங்களின் பாரிய பங்களிப்பு அவசியமானதாக இருக்கும்.** அரச பல்கலைக்கழகங்களில் காணப்படும் இயலளவின் மட்டுப்படுத்தல்களை கவனத்தில் கொள்கையில், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் உட்பட அரசல்லா உயர் கல்வி நிறுவனங்களை நாட்டின் உயர் கல்வித் துறையில் தீவிரமாகப் பங்கேற்பதற்கு ஊக்குவிப்பதும் வசதியளிப்பதும் முக்கியமானதாகும். தற்பொழுது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து 70 இற்கு மேற்பட்ட அரசல்லா உயர் கல்வி நிறுவனங்கள் கல்வி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கி வருகின்றன. இவற்றில் “16 பட்டங்களை வழங்குகின்ற நிறுவனங்களாக” அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் மற்றொரு 19 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. பட்டங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களில் இந்நிறுவனங்களின் இயலாற்றலைப் பரீட்சிப்பதற்காக மீளாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் 07 நிறுவனங்கள் தொடர்பான மீளாய்வுகள் நிடைவடையும் கட்டத்தில் இருக்கின்றன. 2016இன் முதலரைப் பகுதியின்

இறுதியில், ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்கள் 85 பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றன. இவற்றில் 26 பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 2016இன் முதலரைப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டதுடன் இவை பத்து அடிப்படைப் பட்டங்களையும் எட்டு தத்துவ முதுமானிப் பட்டங்களையும் எட்டு முனைவர் பட்டங்களையும் உள்ளடக்கியிருந்தன. அரச மற்றும் தனியார் துறை கல்வி நிறுவனங்கள் இரண்டினாலும் வழங்கப்படுகின்ற பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், தொடர்பான தொழில்சார் நிபுணத்துவச் சபையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது அவசியமானது என்பதனைக் கவனித்தல் வேண்டும். உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இலங்கையிலுள்ள அரசல்லா உயர் கல்வி நிறுவனங்களில் உயர் கல்வியைத் தொடர விரும்புகின்ற வெளிநாட்டு மாணவர்களுக்கு நுழைவு விசாவினையும் வதிவிட விசாவினையம் விதந்துரைக்கும். 2016இன் முதலரைப் பகுதியில் 22 நாடுகளிலிருந்தான 67 விசா விண்ணப்பங்கள் செய்முறைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

- **2016இன் முதலரைப் பகுதியில் தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சிக் கல்வி நல்ல முறையில் செயலாற்றியிருக்கிறது.** 2016 யூன் இறுதியளவில் 2,470 அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளை மேற்கொண்ட 1,137 அரச, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற துறை தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி கல்வி மற்றும் பயிற்சித் துறையில் பதிவு செய்யப்பட்டன. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு 2016இன் முதலரைப் பகுதியில் 22,539 தேசிய தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழ்களை வழங்கியது. 2015இல் 117,321 மாணவர்கள் அரச மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்துள்ளதுடன் 84,552 மாணவர்கள் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். அதேவேளை, பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தனியார் துறை நிறுவனங்களில் பதிவுசெய்து மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை நிறைவுசெய்துள்ளனர். 2015ஆம் ஆண்டுப் பகுதியில் அரச மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களின் மொத்த ஆட்சேர்ப்பு 169,644 ஆக விளங்கியது.

### பாதுகாப்பு வலையமைப்பும் வறுமை ஒழிப்பும்

- **கடந்த ஒரு சில ஆண்டுகளாக இலங்கையில் வறுமை எண்ணிக்கை விகிதத்தினால் அளவிடப்பட்டவாறான வறுமை எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்திருக்கிறது.** தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வீட்டலகு வருமான மற்றும் செலவின அளவீட்டின்படி வறுமை எண்ணிக்கை விகிதம் 2009/10இன் 8.9 சதவீதத்திலிருந்து 2012/13இல் 6.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2009/10இன் 1.8 மில்லியன் மக்களுடன் ஒப்பிடுகையில் 2012/13இல் 1.3 மில்லியன் மக்கள் தலைக்குரிய வறுமை விகித நியதிகளின்படி வறுமைக் கோட்டிற்கு[1] கீழே காணப்படுகின்றனர். எனினும் நாட்டில் மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் ஏற்றத்தாழ்வான வறுமைத்தன்மை இன்னமும் காணப்படுகின்றது. மாகாண மட்டத்தில் மிகக் குறைந்த வறுமை எண்ணிக்கை விகிதம் 116,000 மக்களைப் பிரசன்னப்படுத்தி 2.0 சதவீதமாக மேல் மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்டவிடத்து ஊவா மாகாணம் மிக உயர்ந்த 15.4 சதவீதத்தினைப் பதிவுசெய்து 190,000 மக்களைப் பிரசன்னப்படுத்தியது. மாவட்ட மட்டத்தில் மிகக் குறைந்த வறுமை எண்ணிக்கை விகிதம் கொழும்பு மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட வேளையில் மாறாக முல்லைத்தீவில் மிகக்கூடிய மட்டம் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. மேலும், இலங்கையின் 2012 குடித்தொகை மதிப்பு, வீடமைப்பு மற்றும் வீட்டலகுகள் வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2012/13இன் அடிப்படையில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினாலும் உலக வங்கி குழுமத்தின் உலகளாவிய வறுமை நடவடிக்கை முறை என்பனவற்றினாலும் தயாரிக்கப்பட்ட வறுமை தேசப்படம், பிரதேச செயலக மட்டத்தில் வறுமை வீதங்களிடையே குறிப்பிடத்தக்க புவியியல்சார் வேறுபாடுகள் காணப்படுவதனை எடுத்துக்காட்டின. குறிப்பிட்ட மாவட்டங்களில் பொதுவான அடிப்படையில்

1. இலங்கையின் அலுவலக ரீதியான தேசிய வறுமைக்கோடானது, 2005 கொள்வனவு வலுச்சமநிலையில் அவன் அல்லது அவளினது தலைக்குரிய உண்மை நுகர்வுச் செலவீனம் மாதமொன்றுக்கு ரூ 3,624 இனை விடக் குறைவாக அதாவது அண்ணளவாக ஐ.அ.டொலர் 1.50க்கு சமனாக இருப்பின் 2012/13 வீட்டலகு வருமான மற்றும் செலவீன அளவீட்டின்படி அந்நபரை வறுமையாளனாக வரையறுக்கிறது. வறுமையானது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வீட்டலகு வருமான மற்றும் செலவீன அளவீட்டிலிருந்தான தரவினைப் பயன்படுத்தி அடிப்படை தேவைகளில் செலவினை அடிப்படையாகக் கொண்ட முறைமையின் மூலம் கணிப்பிடப்படுகிறது. அதிபிந்திய வீட்டலகு வருமான மற்றும் செலவீன அளவீடானது 2012/13இற்கு உரியதாகும்.

**வரைபடம் 3.6 தலைக்குரிய வறுமை விகிதம் (சதவீதம்)**




வறுமை குறைவாக இருக்கின்ற வேளையில் சில பிரதேச அலுவலகங்கள் ஆங்காங்கே வறுமை நிலையைக் கொண்டிருக்கின்றன. மேலும், நகர மற்றும் கிராமியத் துறைகளைவிடப் பொதுவாகவே உயர்வாக இருக்கும் பெருந்தோட்டத் துறையின் வறுமை எண்ணிக்கை விகிதம் 2002இன் 30 சதவீதத்திலிருந்து 2012/2013இல் 10.9 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு நுகர்வு வறுமையில் ஏற்பட்ட குறைப்பே காரணமாகும். 2012/2013 அளவீட்டின்படி, கிராமிய மற்றும் நகரத் துறைகளுக்கான வறுமை எண்ணிக்கை விகிதம் முறையே 7.6 சதவீதமாகவம் 2.1 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டன. எனினும், பன்னாட்டு நியமங்களின்படி இலங்கையின் வறுமை குறைவாகவே காணப்படுகிறது. கடுமையான வறுமையினை அளவிடுகின்ற உலக வங்கியின் பிரமாணங்களின்படி, அதாவது நாளொன்றிற்கு ஐ.அ.டொலர் 1.90 என்ற அடிப்படையில் (2011 கொள்வனவு வலுச் சமநிலை) இலங்கையில் கடுமையான வறுமை 2002இல் 8.3 சதவீதத்திலிருந்து 2012இல் 2 சதவீதத்திற்கும் குறைவாக வீழ்ச்சியடைந்திருப்பதுடன் இது, இலங்கையின் அநேகமான அயல் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகவும் காணப்படுகிறது. எனினும், உலக வங்கியின் நாளொன்றிற்கான ஐ.அ.டொலர் 3.10 கொண்ட பன்னாட்டு வறுமைக் கோட்டு அடிப்படையில் (2011இன் கொள்வனவு வலுச் சமநிலை) இலங்கையின் வறுமை 2012இல் 14.6 சதவீதமாகக் காணப்பட்டது.

- **கடந்த சில தசாப்தங்களாக, தொடர்ந்து வந்த அனைத்து அரசாங்கங்களும் பல்வேறுபட்ட வறுமையொழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தின.** தற்பொழுது சமுர்த்தி/ திவினகும உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் மிக முக்கியமான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டமாக இருந்து வருகின்றது. 2016இன் முதலரைப் பகுதியில் சமுர்த்தி/ திவினகும உதவுதொகைத் திட்டத்தின் கீழ் ரூ.20.5 பில்லியன் வழங்கப்பட்டது. இதன் மூலம், நாட்டில் 1.43 மில்லியன் குடும்பங்கள் நன்மை பெற்றன. அவசர காலத்தின் போது பாதிக்கப்படக்கூடிய வறுமையைக் குறைக்கும் நோக்கினைக் கொண்ட சமுர்த்தி/ திவினகும சமூக பாதுகாப்பு நிதியம் 2016இன் முதலரைப் பகுதியில் 39,296 நன்மைபெறுநர்களுக்கு ரூ.221 மில்லியனை வழங்கியது. அதேவேளை, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு 2016இன் முதலரைப் பகுதியில் நாட்டின் தாய்மாரிடையேயும் பிள்ளைகளிடையேயும் ஊட்டச்சத்து நிலைமையினை மேம்படுத்துவதற்காக கர்ப்பணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவுப் பொதிகளையும் 2-5 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களுக்கு ஒரு குவளை உடன்பாலையும் வழங்குவதற்காக முறையே ரூ.1.6 பில்லியனையும் ரூ.9.2 மில்லியனையும் பகிர்ந்தளித்தது. மேலும், வறிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக 2016ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் அரசாங்கம் பள்ளிக்கூட உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம், திரிபோசா நிகழ்ச்சித்திட்டம், ஊனமுற்றவர்களுக்கான நிவாரண உதவிகள், வயது முதிர்ந்தோருக்கான கொடுப்பனவு மற்றும் அனர்த்த நிவாரண உதவி போன்ற அநேகமான மற்றைய

**வரைபடம் 3.7 சமுர்த்தி / திவிநெகும நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றம்**



சமூக உதவி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. அதேவேளை, 2030 அளவில் நிலைத்திருக்கக்கூடிய வலுவான அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கான நடவடிக்கையாக வறுமையினை அதன் அனைத்து வடிவங்களிலும் ஒழிப்பதற்கான அனைத்து அணுகுமுறைகளுக்குமான தேவையை அங்கீகரிக்கின்ற விதத்தில் அரசாங்கம் 2017ஆம் ஆண்டினை "வறுமை ஒழிப்பு ஆண்டாக" பிரகடனப்படுத்தியுள்ளன.

### எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **மின்வலுவிற்கான அதிகரித்துவரும் கேள்வி, முக்கிய வலுச் செயற்றிட்டங்களை நிறைவு செய்வதில் காணப்படும் தாமதம் என்பன நடுத்தர காலத்தில் வலு வழங்கலில் தடங்கல்களை ஏற்படுத்தக்கூடும்.** தற்பொழுது நாட்டின் மொத்த மின்வலு உருவாக்க இயலளவு 3,970 மெகாவாட்டாகும். மொத்த இயலளவில் ஏறத்தாழ 47 சதவீதம் இன்னமும் நீர்மின் வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க மரபுவழியற்ற மின்வலுவின் மூலம் பூர்த்திசெய்யப்பட்டு வருவதுடன் வானிலை நிலைமைகளுக்கு ஏற்ப இது வேறுபடுகின்றது. இச்சூழ்நிலையில் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் வரண்ட வானிலை நிலைமைகள் நிலவுமாயின் உருவாக்கச் செலவு கணிசமாக அதிரித்து இலங்கை மின்சபையின் நிதியியல் நிலைமைகளை கணிசமாகப் பாதிக்கும். மேலும், வரண்ட வானிலை நிலைமைகளின் போது மின்வலு வழங்கலை 900 மெகாவாட் நுரைச்சோலை வலுப் பொறியிலேயே பெருமளவிற்குத் தங்கியிருக்கின்றது. ஆகவே, வரண்ட நிலைமைகளின் போது நிலக்கரியினை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம் முழு இயலளவில் கிடைக்காமல் போகுமாயின் வலுப் பற்றாக்குறையினை தவிர்க்க முடியாமல் இருக்கும். எனவே, தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் செயன்முறையொன்றாக, தேசிய வலுத் திட்டமிடல் மீதான கவனம் வலுப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய செயன்முறைகள் நாட்டின் வலுப் பாதுகாப்பிற்கும் அதேபோன்று இலங்கை மின்சபையின் நிதியியல் ஆற்றலுக்கும் வசதியளிக்கும்.

- **பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் அமைப்பின் உறுப்பினர் நாடுகள் அவற்றின் உற்பத்தி மட்டங்களை மட்டுப்படுத்துவது எனத் தீர்மானம் செய்தமையின் காரணமாக, 2016 ஒத்தோபரிலிருந்து பன்னாட்டு எண்ணெய் விலைகள் அதிகரித்துச் செல்லும் போக்கினைக்காட்டின.** ஐக்கிய அமெரிக்காவின் வலுத் தகவல் நிருவாகத்தினால் வழங்கப்பட்ட எதிர்வுகூறல்களின் அடிப்படையில் பிறெண்ட் எண்ணெயின் சராசரி விலைகள் 2016 இறுதியில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 42.5 ஆக இருக்கும். போக்குவரத்துத் துறைக்கான பெற்றோலியத்தின் விற்பனைகள் கணிசமாக அதிகரித்தமைக்கு ஆண்டின் முதலரைப் பகுதியில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் குறைந்த உள்நாட்டு பெற்றோலிய விலைகள் காரணமாக விளங்கியதுடன் இப்போக்கு எஞ்சிய காலப்பகுதியிலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை 2016இன் முதலரைப் பகுதியில் பெருமளவு எரிபொருள் எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கத்தின் காரணமாக அதிகரித்த வலு உருவாக்கத் துறைக்கான பெற்றோலிய விற்பனைகள் வரண்ட வானிலை நிலைமைகளின் காரணமாகத் தொடர்ந்தும் அதிகரிக்கக்கூடும். எனினும், 2016இல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த நிதியியல் நிலைமையானது ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நிலவிய தாழ்ந்த பன்னாட்டு எண்ணெய் விலைகளின் காரணமாக மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **தொலைத்தொடர்பூட்டல் துறையின் அண்மைய அபிவிருத்திகள் உள்ளூர் தொலைத்தொடர்பூட்டல் தொழிற்பாட்டாளர்களின் தரைவழி உட்கட்டமைப்புச் செலவுகளைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் தாங்கத்தக்க செலவில் நாடு முழுவதும் உயர் வேகம் கொண்ட இணையத்தள வசதிகள் கிடைப்பதனை அதிகரிக்கும்.** இது, வினைத்திறன்மிக்க இணையத்தளப் பணிகளுடன் அனைத்துப் பொருளாதாரத் துறைகளையும் ஒருங்கிணைப்பதற்கு இன்றியமையாததாக இருக்கக்கூடிய இலத்திரனியல் வியாபாரம் மற்றும் இலத்திரனியல் பயில்தல் போன்றவற்றை மேம்படுத்தல், தகவல்களையும் தொலைத்தொடர்பூட்டல் அறிவினையும் அதிகரித்தல் உட்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துதல் மற்றும் பிந்திய தொழில்நுட்பங்களுக்காக வினைத்திறன்மிக்க அலைவரிசைப் பிரிகைகள் போன்ற கேள்வி மற்றும் நிரம்பல்பக்க சவால்களை வெற்றிகொள்ள இது உதவும்.